# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2283/16 - 2022 ජූනි මස 06 වැනි සඳුදා - 2022.06.06

2283/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: PDV/LND/MISCL/1-16(i).
காணி அமைச்சின் இல.: 4-3/9/2018/IR/276 மற்றும் 4-3/9/2018/IR/276-B.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், பதவிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 08, மைதிரிபுர கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் பூமுபி 20, உப வரைபட இல. 43, பத்திர இல. 105 மற்றும் 2021.08.18 ஆந் திகதிய வரைபடத்தின் காணி விபரங்கள் பட்டியலின் பக்க இலக்கம் மற்றும் 1419 இல் குறிப்பிடப்பட்டுள்ள 2.2744 ஹெக்டயார் ஆன விபரமாக காட்டப்பட்ட பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் மற்றும் அளவுகளிலுள்ள காணிகளின் எல்லை.

**1. துண்டு இல. 8067**

காணியின் பெயர்: பதவிய காடு; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு, மைதிரிபுர, பதவியில் வசிக்கும் எம். டபிள்யூ. பிரேமசந்திர என்பவரால் அனுமதியின்றி பயிரிடப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 8068**

காணியின் பெயர்: பதவிய காடு; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அனுமதிப்பத்திர இலக்கம் அனு/பத/பி/1618, மைதிரிபுர, பதவியில் லியனலாகே மெரில் லியனகே; விஸ்தீரணம்: 1.4215 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 8069**

காணியின் பெயர்: பதவிய காடு; விபரம்: வயல், கால்வாய்ப் பகுதி, வீதிப் பகுதி; உரிமை கோருபவர்: அனு/பத/பி/1650, மைதிரிபுர, பதவியில் வசிக்கும் கிரிஹாமிகே சிரிசேன; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

4. துண்டு இல. 8170

காணியின் பெயர்: பதவிய காடு; விபரம்: வயல், கால்வாய்ப் பகுதி, வீதிப் பகுதி; உரிமை கோருபவர்: அரசு, மைதிரிபுர, பதவியில் வசிக்கும் தலகல ஆராச்சிலாகே தொன் தீப்தி வந்தனா சந்ரசேகர என்பவர் அனுமதிப்பத்திர இலக்கம் **D/08/39A,** கீழ் பயிரிடப்படுகிறது; விஸ்தீரணம்: 0.6505 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அந்தந்த காணித் துண்டிலக்கங்களுக்கு கீழ்க் குறிக்கப்பட்ட நேரத்திற்கு பதவிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

| திகதி | நேரம் | காணித் துண்டிலக்கம் |
|---|---|---|
| 2022.07.18 | மு.ப. 9.30 | 8167 தொடக்கம் 8170 வரை |

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். சீ. மலவிஆரச்சி,
பிரதேச செயலாளர்,
பதவிய.

பிரதேச செயலகம்,
பதவிய,
2022, யூன் 02.

EOG 06 - 0070